பக்கங்கள்: 05

THEEMPUNAL

# தீம்புனல்

மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com தீ : 01 புனல்:50 12.01.2024 வெள்ளிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053

## சிவபூமி நாய்கள் சரணாலயம் தற்காலிக இடை நிறுத்தம்



இயக்கச்சியில் கடந்த நான்கு வருடங்களாக செயற்பட்டு வந்த சிவபூமி நாய்கள் சரணாலயம் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக அறக்கட்டளையினர் தெரிவித்துள்ளனர்.

ஐந்தாவது ஆண்டில் கால்பதிக்கும் இந்த நாய்கள் சரணாலயம் சுகாதார வசதிகள் இன்மையாலும் மருத்துவத் துறையின் போதிய ஆதரவின்மையாலும் நாய்களை பராமரிப்பதற்கு போதிய பராமரிப்பாளர்கள் இல்லாமையாலும் அறக்கட்டளையினர் நாய்கள் சரணாலயத்தை தற்காலிகமாக மூடியுள்ளனர்.

எனினும் தகுந்த பணியாளர்கள், மருத்துவ ஒத்துழைப்பு கிடைத்ததும் மீண்டும் திறக்கப்படும் என்றும் அதுவரை நாய்களை அங்கு விடவேண்டாம் என அறக்கட்டளையினர் தெரிவித்துள்ளனர்.

# 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கடும் மழையுடனான காலநிலை தொடரும் நிலையில் 10 மாவட்டங்களில் உள்ள 28 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.

பதுளை, காலி, கண்டி, களுத்துறை, மாத்தளை, மாத்தறை, மொனராகலை, கேகாலை, நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே குறித்த மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடும் மழையுடனான சீரற்ற காலநிலையால் 13 மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 635 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வெள்ளம் மற்றும் மண்சரிவு, மரம் முறிந்து விழுதல் உள்ளிட்ட அனர்த்தங்களால் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 6 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 318 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

## சமூக வலைத்தளங்களில் வெளியான வினாத்தாள்

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற விவசாய விஞ்ஞான பாடத்தின் பகுதி இரண்டாவது வினாத்தாள் தேர்வுக்கு முன்னதாக சமூக வலைத்தளங்களில் வெளியானதையடுத்து வினாத்தாள் இரத்து செய்யப்பட்டுள்ளதெனவும் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

## TIN திட்டம் தற்காலிகமாக ஒத்திவைப்பு

சில நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் தொழில்நுட்பச் சிக்கல்கள் காரணமாக ஒவ்வொரு அரச நிறுவனங்களுக்கும் சென்று ஊழியர்களுக்கு வரி இலக்கம் (TIN) திறக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை தற்காலிகமாக ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று (11) தெரிவித்தார்.

மேலும், நடப்புக் கணக்கு தொடங்கும் போதும், வாகனங்களை பதிவு செய்யும் போதும், புதுப்பிக்கும் போதும் அடுத்த மாதம் 1 ஆம் திகதிக்குள் TIN வழங்க வேண்டும் என்ற கட்டாய முடிவு ஏப்ரல் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப வசதிகள் போதிய அளவில் இல்லாததால் இதற்கான கால அவகாசம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்திருந்தார். ஆண்டுக்கு பன்னிரெண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டும் 18 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் மட்டுமே வரி செலுத்தத் தகுதியுடையவர்கள். இதனால், 18 வயது பூர்த்தியடைந்த அனைவரும் வரி அடையாள எண்ணைப் பெறவேண்டும். ஆனால் அவை அனைத்தும் வரிப் பொறுப்புக்கு உட்பட்டவை என்று அர்த்தமல்ல.

ஏப்ரல் மாதம் முதல் நடப்புக் கணக்கு தொடங்கும் போதும், கட்டடத் திட்டங்களுக்கு அனுமதி கோரும் போதும், வாகனப் பதிவு, உரிமம் புதுப்பித்தல், நில உரிமைப் பதிவு போன்றவற்றிலும் வரி அடையாள எண்ணைக் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் என்று நிதித் துறை அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## நீரில் மூழ்கியது தென்கிழக்கு பல்கலைக்கழகம்

மழை, வெள்ளம் மற்றும் வான்கதவுகள் திறப்பு காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகம் நீரில் மூழ்கியுள்ளது.

சீரற்ற காலநிலையால் பல்கலைக்கழக எல்லைக்குள் வெள்ள அபாயம் ஏற்படலாம் என்ற அச்சத்தில் ஒலுவில் வளாக மாணவர்களுக்கான அனைத்து கல்வி நடவடிக்கைகளும் 2024 ஜனவரி 16 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டு மாணவர்களும் விடுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து வெள்ள அபாயத்தால் பாதிக்கப்படும் என சந்தேகிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்த அகற்றக்கூடிய அனைத்துப் பொருட்களும் பல்கலைக்கழக அனர்த்த முகாமைத்துவ குழுவில் கண்காணிப்பில் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டிருந்தன.



# EPF, ETF பல வருடங்களாக வழங்கப்படவில்லை—சஜித்

மலையக தோட்டத் தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதி (EPF), ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிகள் (ETF) பல வருடங்களாக வழங்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று (12) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சில தோட்டப் பகுதிகளில் உள்ள பங்குகளை பல்வேறு தொழிலதிபர்களுக்கு வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக குறித்த மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தேயிலை பயிரின் 70% இற்கும் அதிகமானவை சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களால் குறைந்தபட்ச நிலத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. அரச மற்றும் நிறுவன உரிமையுடைய தேயிலைத் தோட்டங்கள் குறைந்த பங்களிப்பையே வழங்குகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

# இலங்கையின் பொருளாதாரத்தில் கணிசமாக முன்னேற்றம்

இலங்கையின் பொருளாதாரம் கணிசமாக முன்னேற்றம் கண்டிருப்பதாகவும் இதற்கு ஜனாதிபதி வழங்கிய சிறந்த தலைமைத்துவத்தைப் பாராட்டுவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று (11) சந்தித்த ஜப்பான் நிதி அமைச்சர் சுசூகி ஷூனிச்சி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தின் முதலாவது மீளாய்வை இலங்கை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாகவும் இலங்கையின் சவாலான சீர்திருத்தங்கள் சர்வதேச சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் ஜப்பானிய நிதியமைச்சர் சுசூகி ஷூனிச்சி தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார நிலைமையில் இந்தச் சாதகமான முன்னேற்றம் நம்பிக்கைக்குரியது என்றும், இது இலங்கை மீதான உத்தியோகபூர்வ மற்றும் தனியார் கடன் வழங்குநர்களின் சர்வதேச நம்பிக்கையை மேம்படுத்த சாதகமாக இருப்பதாகவும் ஜப்பான் நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

# போக்குவரத்து சேவை பேருந்துகளிலும் CCTV கமராக்கள்

அனைத்து பயணிகள் போக்குவரத்து சேவை பேருந்துகளிலும் CCTV கமராக்கள் பொருத்தப்பட உள்ளதாக பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். வன்முறை மற்றும் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்

# தைப்பொங்கல் தினத்தில் கைதிகளைப் பார்வையிட வசதி

தைப்பொங்கல் பண்டிகையையொட்டி, எதிர்வரும் 15 ஆம் திகதி, இந்து மதத்தைப் பின்பற்றும் கைதிகளைப் பார்வையிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்தார். இத் தினத்தில் இந்துமதக் கைதிகளுக்கு தற்போதுள்ள விதிமுறைகள், முறையான சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளின் கீழ் ஒருவருக்கு ஏற்றளவு உணவுப் பொதிகள் மற்றும் இனிப்புகளை அவர்களின் உறவினர்கள் வழங்க அனுமதிக்கப்படுவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி.
பருத்தித்துறை வீதி. நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# இ.போ.சவின் நஷ்டத்தை குறைக்க புதிய திட்டம்

இலங்கை போக்குவரத்து சபை அரச பேருந்துகளில் நாளொன்றுக்கு சுமார் 10 மில்லியன் ரூபா நட்டத்தைக் குறைக்க அட்டை அல்லது QR குறியீட்டை உள்ளடக்கிய கட்டண முறையை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன ஜனவரி 11 வியாழன் அன்று பாராளுமன்றத்தில் சில பஸ் சாரதிகள் அல்லது நடத்துநர்கள் அன்றைய மொத்த வருமானத்தை அந்தந்த டிப்போவிற்கு திருப்பித் தருவதில்லை, இதனால் ஒரு டிப்போ ஒன்றுக்கு ஒரு நாளைக்கு சுமார் 100,000 ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்று கூறினார்.

“ஒரு நாளைக்கு மொத்தமாக 10 மில்லியன் ரூபாய் நஷ்டம்” என்று குணவர்தன கூறினார். “நீங்கள் இலங்கை போக்குவரத்து சபையில் புதிதாக ஏதாவது செய்ய முயலும் போது ஏற்படும் பிரச்சினைகளை நீங்கள் அறிவீர்கள்,” என்று குறிப்பிட்ட அவர், பயணிகளுக்கு பணம் செலுத்துவதற்காக மின்னணு அட்டை அல்லது QR குறியீட்டு முறையை அறிமுகப்படுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சகம் “பெரும் முயற்சிகளை” மேற்கொண்டு வருகிறது.

இத்திட்டம் தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளது என்றும் அமைச்சர் கூறினார். இந்த விடயத்தில் நிபுணத்துவம் பெற்ற அமைச்சின் செயலாளர் ஒருவரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். “எனவே சுமார் இரண்டு மாதங்களில், நாங்கள் ஒரு அட்டை அல்லது QR முறையை அறிமுகப்படுத்த முடியும்,” என்று அவர் கூறினார்.

நவம்பர் 2023 இல் இலங்கை போக்குவரத்தை டிஜிட்டல் மயமாக்கல் முயற்சியை அரசாங்கம் அறிவித்தது, 2024 இல் செயல்படுத்தப்படும். சாரதிகள் தமது நாளாந்த வருமானத்தை வைப்பிலிடாததால் வருடாந்தம் 3,650 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படுவதாக அவர் அப்போது கூறினார்.

2022 நாணய நெருக்கடிக்குப் பின்னர் சர்வதேச நாணய நிதியத்துடன் 17 ஆவது வேலைத்திட்டத்திற்குச் சென்றதிலிருந்து இலங்கையின் அரசதுறையின் டிஜிட்டல் மயமாக்கல் நிகழ்ச்சி நிரலில் அதிகமாக உள்ளது, இது பல தசாப்தங்களில் மோசமானது. ஒரு புதிய கொள்கையின் கீழ், மார்ச் 31, 2024க்குள் அரசு நிறுவனங்களின் அனைத்து நிதி பரிவர்த்தனைகளும் டிஜிட்டல் முறையில் செய்யப்படும் என்று செப்ரெம்பர் 2023 இல் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எவ்வாறாயினும், பல அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மாற்றியமைக்க மெதுவாக இருப்பதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இலங்கையில் பஸ் போக்குவரத்துத்துறையை அரசாங்கம் பொறுப்பேற்றபோது பயணிகள் போக்குவரத்து சேவையானது இருபத்து இரண்டாயிரம் மைல்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருந்துள்ளது. அப்போதைய பிரதமர் அமரர் S.W.R.D பண்டாரநாயக்க அவர்களால் இத்துறையானது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அப்போதைய போக்குவரத்து அமைச்சராக மைத்திரிபால சேனநாயக்க இதன் ஆரம்ப ஸ்தாபகராகக் காணப்பட்டார் என ஆவணப்படுத்தப்பட்ட குறிப்புகள் சொல்கின்றன.

1958 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி கொழும்பு காலிமுகத்திடலில் பழைய பாராளுமன்ற வளாகத்தில்தான் இந்நிகழ்வானது நடைபெற்றுள்ளது. அப்போது 76 தனியார் பஸ் நிறுவனங்களும் அவற்றிடம் இருந்த மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பஸ் வண்டிகளும் அரசுடமையாக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் பயணிகள் போக்குவரத்துச் சேவை என அழைக்கப்பட்டு வந்த இத்துறையானது, இலங்கை போக்குவரத்து சேவை எனப் பெயரிடப்பட்டுள்ளது. நாட்டில் பஸ் போக்குவரத்துத் துறையை மக்கள் மயப்படுத்தி 60 ஆண்டுகளுக்கு மேலாகும் நிலையில், தனியார் துறையொன்றை அரசாங்கம் பொறுப்பேற்ற முதலாவது சந்தர்ப்பம் அது என வரலாறுகள் குறிப்பிடுகின்றன. இலகுவான போக்குவரத்தை மக்களுக்கு வழங்குவதில் இ.போ.ச சாதனை செய்துள்ளது. ஆனால், உள்ளே நடக்கும் சில பிரச்சினைகள் வெளியே தெரியவருவதில்லை. இ.போ.சவின் நஷ்டத்தை இல்லாமல் செய்வதற்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.



ஏமன் நாட்டைச் சேர்ந்த ஹூவுதி இயக்கத்துடன் தொடர்புடைய இடங்கள் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் தாக்குதல் நடத்த தொடங்கியுள்ளன.

ஈரான் ஆதரவு ஹூவுதி குழுவால் சர்வதேச கடல் வழிகளில் பிரச்சினை அதிகரித்து வருகிறது.

கடந்த ஆண்டு இறுதியில் இருந்து செங்கடலில் பயணிக்கும் சர்வதேச கப்பல்களை குறிவைத்து ஹூவுதி இயக்கம் தாக்குதல் நடத்தி வருகிறது.

கடந்த ஆண்டு இந்தப் பிரச்சினை தொடங்கப்பட்ட பிறகு ஹூவுதி இயக்கத்தின் மீது நடத்தப்படும் முதல் தாக்குதல் இதுவாகும்.

அதிகாரபூர்வமாக அன்சார் அல்லா என்று அழைக்கப்படும் ஹூவுதி இயக்கம், 1990களில் ஏமன் நாட்டில் தோன்றிய ஒரு ஷியா இஸ்லாமிய அரசியல் மற்றும் இராணுவ அமைப்பாகும்.

ஏமனின் சன்னி பெரும்பான்மை அரசாங்கத்திற்கு எதிராக இந்த இயக்கம் இயங்கி வருகிறது.

# லஷ்கர்–இ–தொய்பா நிறுவனர் மரணம்





ஹபீஸ் சயீத்துக்கு அடுத்த தலைவராக இருந்த லஷ்கர்-இ-தொய்பா நிறுவன உறுப்பினர் ஹபீஸ் அப்துல் சலாம் புத்தாவி இறந்துவிட்டது உறுதி என்று ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் தெரிவித்துள்ளது.

2008 இல் நடந்த 26/11 மும்பை தீவிரவாத தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டவர் ஹபீஸ் சயீத் ஆவார், லஷ்கர்-இ-தொய்பாவின் தலைவராக இருந்த போது புத்தாவி துணை தலைவராக இருந்தார்.

இந்நிலையில், புத்தாவி மே 2023 இல் மாரடைப்பால் உயிரிழந்தார் என்று தெரிகிறது.

லஷ்கர்-இ-தொய்பா நடத்திய 26/11 மும்பை தாக்குதல்கள் நான்கு நாட்கள் நடந்தன. அதில் 166 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 300 பேர் காயமடைந்தனர்.

இந்தியா மீது தாக்குதல் நடத்தியதற்காக ஹபீஸ் சயீத்தை ஐ.நா தடைசெய்யப்பட்ட பயங்கரவாதி என்று அறிவித்தது.

ஹபீஸ் சயீத்தை ஒப்படைக்குமாறு சமீபத்தில் பாகிஸ்தானிடம் இந்திய அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

ஹபீஸ் அப்துல் சலாம் புத்தாவி (77), பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள முரிட்கேயில் பாகிஸ்தான் அரசாங்கத்தின் காவலில் இருந்த போது இறந்ததாக ஐ.நா தனது அதிகாரபூர்வ இணையத்தளத்தில் அறிவித்துள்ளது.

# சமானிய பெண்ணுடன் புருனே இளவரசருக்கு திருமணம்

“ஹாட் ராயல்” என்று அழைக்கப்படும் புருனேயின் இளவரசர் அப்துல் மதீன் இப்னி ஹசனல் போல்கியா, தனது வருங்கால மனைவி அனிஷா ரோஸ்னாவை ஞாயிற்றுக்கிழமை திருமணம் செய்யவுள்ளார்.

இந்த திருமண வைபவம் 10 நாள் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 32 வயதான இளவரசனும், 29 வயதான அனிஷாவும் வியாழன் அன்று பந்தர் செரி பெகவானில் உள்ள தங்கக் குவிமாட மசூதியில் இஸ்லாமிய முறைப்படி திருமணம் செய்ய உள்ளனர்.

உலகின் மிக நீண்ட காலம் ஆட்சி செய்த மன்னரும், ஒரு காலத்தில் உலகின் மிகப் பெரிய செல்வந்தருமான சுல்தான் ஹசனல் போல்கியாவின் 10 ஆவது குழந்தை மற்றும் நான்காவது மகன்தான் மதின். புருனே இளவரசர் மதின் பெரும்பாலும் இங்கிலாந்து இளவரசர் ஹாரியுடன் ஒப்பிடப்படுகிறார்.

காரணம், இவரும் புருனேயின் விமானப்படையில் ஹெலிகொப்டர் பைலட்டாக இருக்கிறார். அவர் பிரிட்டனின் ராயல் மிலிட்டரி அகாடமி சாண்ட்ஹர்ஸ்டில் பட்டம் பெற்றுள்ளார்.

மேலும், கடந்த 2019 ஆம் ஆண்டு தென்கிழக்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் புருனேவை பிரதிநிதித்துவப்படுத்தி, போலோ விளையாட்டில் விளையாடினார்.

மணமகள் அனிஷா, சுல்தான் போல்கியாவின் சிறப்பு ஆலோசகரான பெஹின்டத்தோ இசாவின் பேத்தி ஆவர். அவர் தனது ஃபேஷன் பிராண்ட் மற்றும் சுற்றுலா வணிகத்தின் இணை உரிமையாளராக அறியப்படுகிறார்.

# புதிய பாராளுமன்ற உறுப்பினர் சத்தியப்பிரமாணம்



நயன வாசலதிலக பாராளுமன்றத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் இன்று (12) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி இராஜினாமா செய்ததால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு நயன வாசலதிலக நியமிக்கப்பட்டார்

# யுக்திய நடவடிக்கையில் மேலும் பலர் கைது



யுக்திய விசேட போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் கீழ் இன்று (12) நள்ளிரவு 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியால நடவடிக்கைகளில் 863 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சோதனைகளின் போது 303 கிராம் ஹெரோயின், 141 கிராம் ஐஸ் மற்றும் 1250 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உதவித்தொகை



பிரதேச செயலகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 18,333 பயிற்சி பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த வருடம் முதல் 2,500 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக பெண்கள் மற்றும் சிறுவர் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

நாட்டிலுள்ள மொத்த முன்பள்ளிகளின் எண்ணிக்கை 19,216 எனவும், மொத்த முன்பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கை 37,000 எனவும், பட்டதாரி முன்பள்ளி ஆசிரியர்கள் 29,000 எனவும் முன்பள்ளி மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 585,000 எனவும் அமைச்சர் கூறினார்.

# சுகாதார ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு முடிவடைந்தது



வைத்தியர்களுக்கு வழங்கப்படவுள்ள 35,000 ரூபா கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரி சுகாதார சேவையின் தொழிற்சங்கங்கள் சில ஒன்றிணைந்து கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் இன்று காலை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தால் நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன.

இவ்வாறானதொரு பின்னணியில், வைத்தியசாலை செயலாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், சுகாதார பணி உதவியாளர்கள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்களும் நேற்று காலை 6 மணி முதல் ஒருநாள் பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்து இன்று காலை 8.00 மணியுடன் நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவர தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சுகாதார சேவை தொழிற்சங்க கூட்டமைப்பின் அழைப்பாளர் ரவி குமுதேஷ், இப்பிரச்சினைக்கு தீர்வு காண ஜனாதிபதி தலையிடாவிட்டால் எதிர்காலத்தில் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்தார்.

# ஜனாதிபதியை சந்தித்த அமைச்சர் சுசூகி



இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பான் நிதியமைச்சர் சுசூகி உள்ளிட்ட ஜப்பான் தூதுக் குழுவினர் இன்று மாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் காலை உணவு



அனைத்து பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் காலை உணவு வழங்கும் வேலைத்திட்டம் இவ்வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்படுமென மகளிர், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இன்று (11) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்

நாட்டின் 120,000 பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் காலை உணவை வழங்குவது சவாலாக அமைந்திருந்தது. தற்போது மாணவர் ஒருவருக்காக ஒதுக்கப்படும் தொகையை 60 ரூபாய் முதல் 100 ரூபாய் வரையில் அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கையின் பெருமளவான மாணவர்கள் போசாக்கு குறைபாட்டிற்கு ஆளாகியுள்ள நிலையில் புரோட்டின் நிறைந்த போசாக்கான உணவை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

# ஆப்கானிஸ்தானை வீழ்த்திய இளம் இந்தியப்படை

பஞ்சாப் மாநிலம் மொகாலியில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதலாவது ரி20 போட்டியில் இந்தியா 6 விக்கெட்களால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 158 ஓட்டங்கள் எடுத்தது. இந்தியா 17.3 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 159 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.



ரஹமனுல்லா குர்பாஸ் 23, கப்டன் இப்ராஹிம் ஜாட்ரான் 25, ரஹமத் ஷா 3 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர், 57 ஓட்டங்கள் எடுத்த நிலையில் நட்சத்திர வீரர் முகமது நபி அதிரடியாக விளையாடி வேகமாக ஓட்டங்களைச் சேர்த்தார். 4 ஆவது விக்கெட்டுக்கு 68 ஓட்டங்கள் இணைப்பாட்டமாக அடித்தாலும் சற்று தடுமாற்றமாகவே விளையாடிய ஓமர்சாய் 29 (22) ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்த சில ஓவரிலேயே மறுபுறம் அதிரடியாக விளையாடிய முகமது நபியும் 2 பவுண்டரி 3 சிக்ஸருடன் 42 (27) ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இறுதியில் நஜிபுல்லா ஜாட்ரான் 19* கரீம் ஜானத் 9* ஓட்டங்கள் எடுக்க 20 ஓவர்களில் ஆப்கானிஸ்தான் 158 ஓட்டங்கள் எடுத்தது. இந்தியா சார்பில் முகேஷ் குமார், அக்சர் பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் எடுத்தனர்.

159 ஓட்டங்கள் எனும் இலக்குடன் இந்தியா களம் இறங்கியது. 14 மாதங்கள் கழித்து விளையாடிய கப்டன் ரோஹித் சர்மா முதல் ஓவரிலேயே தவறான புரிதலால் ரன் அவுட்டாகி சென்றார். அவரை அவுட் செய்துவிட்ட மற்றொரு துவக்க வீரர் சுப்மன் கில் அதிரடியாக விளையாட முயற் சித்து அடுத்த சில ஓவரிலேயே 23 (12) ஓட்டங்களில் ஸ்டம்பிங் முறையில் வெளியேறினார். தடுமாறிய இந்தியாவை அடுத்ததாக சிவம் துபே மற்றும் திலக் வர்மா ஆகியோர் ஜோடி சேர்ந்து மீட்டெடுத்தனர். 3 ஆவது விக்கெட்டுக்கு 44 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப் அமைத்து சரிவை சரி செய்த இந்த ஜோடியில் திலக் வர்மா 26 (22) ஓட்டங்களில் அவுட்டாக அடுத்ததாக வந்த ஜித்தேஷ் சர்மா அதிரடியாக 5 பவுண்டரியுடன் 31 (20) ஓட்டங்கள் விளாசி ஆட்டமிழந்தார். ஆனால், மறுபுறம் தொடர்ந்து நங்கூரமாக விளையாடிய சிவம் துபே நேரம் செல்லச் செல்ல அதிரடியாக அரை சதமடித்து 5 பவுண்டரி 2 சிக்ஸருடன் 60* (40) ஓட்டங்கள் அடித்து வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.

9 பந்துகளில் ரிங்கு சிங் 16* ஓட்டங்கள் எடுத்தார். 17.3 ஓவரிலேயே 4 விக்கெட்களை இழந்த இந்தியா 159 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் சிறப்பான வெற்றி பெற்றது.




வென்ற இந்தியா முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. அதைத் தொடர்ந்து களமிறங்கிய ஆப்கானிஸ்தானுக்கு 50 ஓட்டங்கள் ஓப்பனிங் பார்ட்னர்ஷிப் அமைத்த போதிலும் தடுமாறமாக விளையாடிய ரஹ்மனுல்லா குர்பாஸ் 23 ஓட்டங்களில் அவுட்டானார்.

# 19 ஓட்டங்கள் 7 விக்கெட்கள் ஹஸரங்க உலக சாதனை

ஸிம்பாப்வே, இலங்கை ஆகியவற்றுக்கிடையேயான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் 8 விக்கெட்களினால் வெற்றி பெற்ற இலங்கை தொடரைக் கைப்பற்றியது.

மழைகாரணமாக முதலாவது போட்டி நடைபெறவில்லை. இரண்டாவது போட்டியில் இலங்கை போராடி வெற்றி பெற்றது.

வெற்றியாளரை தீர்மானிக்கும் முக்கியமான கடைசிப் போட்டி ஜனவரி 11 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. மழையால் இருதரப்புக்கும் தலா 27 ஓவர்களாக குறைக்கப்பட்ட அந்தப் போட்டியில் வென்றால் தான் குறைந்தபட்சம் தொடரை சமன் செய்ய முடியும் என்ற கட்டாயத்தில் டாஸ் வென்ற ஸிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆனால், சுழலுக்கு சாதகமாக இருந்த மைதானத்தில் ஹஸரங்க வீசிய மாயாஜால சுழல் பந்துகளுக்கு தாக்குப் பிடிக்க




முடியாத ஸிம்பாப்வே 22.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 96 ஓட்டங்கள் எடுத்தனர்.

கப்டன் எர்வின் 0, மில்டன் சும்பா 2, ரியன் பர்ல் 9, சிக்கந்தர் ராசா 10 என அந்த அணியின் முக்கிய வீரர்கள் குறைந்த ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அதிகபட்சமாக கும்பி 29 ஓட்டங்கள் எடுத்தார். மறுபுறம் பந்து வீச்சில் மாயாஜாலம் செய்த இலங்கை சார்பில் அதிகபட்சமாக வணிந்து ஹஸரங்க 5.5 ஓவரில் ஒரு மெய்டன் உட்பட வெறும் 19 ஓட்டங்கள் கொடுத்து 7 விக்கெட்டுகளை சாய்த்தார். முதல் தர கிரிக்கெட்டில் மிகவும் குறைந்த ஓவர்களில் 7 விக்கெட்டுகளை எடுத்த வீரர் என்ற அபாரமான உலக சாதனையும் அவர் படைத்தார்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 12.01.2024 அன்று வெளியிடப்பட்டது.